Rane Holdings Limited

Registered Office: "Maithri",
No. 132, Cathedral Road,
Chennai - 600 086
+91-44-2811 2472
www.ranegroup.com
CIN: L35999TN1936PLC002202

//Online Submission//

RHL/SE/038/2026-27 July 18, 2026

BSE Limited Listing Centre Scrip Code: **505800**	**National Stock Exchange of India Ltd.** NEAPS Symbol: **RANEHOLDIN**

Dear Sir / Madam,

Sub: Newspaper advertisement - Window for Re-lodgement of transfer requests for Physical Shares

We hereby enclose copies of the notice to shareholders of the Company published on July 18, 2026, in the newspapers, viz., 'Business Standard' (English) and 'Hindu Tamizh Thisai' (Regional language) on the bi-monthly publication informing shareholders regarding special window for re-lodgement of transfer requests for physical shares in accordance with SEBI Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/I/3750/2026 dated January 30, 2026.

We request you to take the above on record and note the compliance under relevant provisions of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 (SEBI LODR).

Thanking you,

Yours faithfully,

For **Rane Holdings Limited**

SUBHA SHREE SRIDHARAN
Digitally signed by SUBHA SHREE SRIDHARAN
Date: 2026.07.18 10:18:55 +05'30'

S Subha Shree
Secretary

Encl.: a/a

Newspaper: Business Standard
Language: English
Edition: All editions
Date of Publication: July 18, 2026

தலைமைச் செயலகத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை

தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வர் தனிப் பிரிவில் பொதுமக்கள் தினமும் தங்கள் கோரிக்கை மனுக்கள் மற்றும் புகார்களை வழங்கி வருகின்றனர்.

இதனிடையே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அஞ்சலையம்மாள் என்ற பெண் நேற்று முன்தினம் முதல்வர் தனிப்பிரிவு அலுவலகத்துக்கு மனு கொடுக்க வந்தபோது, திடீரென மண்ணெண்ணெயை உடலில் ஊற்றித் தீக்குளிக்க முயன்றார். அவரை போலீஸார் தடுத்து காப்பாற்றிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து தலைமைச் செயலகத்தில் போலீஸ் பாதுகாப்பு நேற்று பலப்படுத்தப்பட்டது. குறிப்பாக, முதல்வர் தனிப்பிரிவுக்கு மனு கொடுக்கவரும் பொதுமக்கள் தீவிர சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர்.

மாசு கட்டுப்பாட்டு வாரியத்துக்கு புதிய தலைவர் நியமனம்

சென்னை

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் புதிய தலைவராக ஐஎப்எஸ் அதிகாரி அனுராக் மிஸ்ரா நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

இதுகுறித்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் செயலர் காகர்லா உஷா வெளியிட்ட அறிவிப்பில், 'வனத்துறையின் முதன்மை தலைமை வனப்பாதுகாவலராக உள்ள ஐஎப்எஸ் அதிகாரி அனுராக் மிஸ்ரா, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்' என்று கூறப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் உறுப்பினர் செயலராக ஐஏஎஸ் அதிகாரி பி.அலர்மேல்மங்கை நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பழுதாகி நின்ற லாரி மீது பைக் மோதி இளைஞர் உயிரிழப்பு

சென்னை

கொளத்தூர் விநாயகபுரம் ராஜேந்திர பிரசாத் தெருவை சேர்ந்தவர் பிரவீன்குமார் (27). கந்தன்சாவடியில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். இவர் நேற்று அதிகாலை 3.30 மணி அளவில் பணிக்காக பைக்கில் மதுரவாயல் பைபாஸ் சாலை வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது அம்பத்தூரில் இருந்து ஸ்ரீபெரும்புதூருக்கு இரும்பு கம்பிகளை ஏற்றிச் சென்ற சரக்கு லாரி, எம்ஜிஆர் பல்கலைக்கழகம் அருகே திடீரென பழுதாகி சாலையில் நின்றது. அந்த லாரியின் பின்புறத்தில் பிரவீன்குமார் ஓட்டிச்சென்ற பைக் எதிர்பாராத விதமாக மோதியது. இந்த விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த பிரவீன்குமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீஸார், தஞ்சாவூரை சேர்ந்த லாரி ஓட்டுநர் ரமேஷ் (47) என்பவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

டிஎன்பிஎஸ்சி குரூப் 1 முதல்நிலைத் தேர்வு தேதி மாற்றம்

சென்னை

டிஎன்பிஎஸ்சி குரூப்-1 முதல்நிலைத் தேர்வு தேதி மாற்றப்பட்டுள்ளது.

துணை ஆட்சியர், வணிக வரி உதவி ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர், பதிவுத் துறை மாவட்டப் பதிவாளர், தொழிலாளர் நல உதவி ஆணையர் பதவிகளில் 28 காலி இடங்களை நிரப்புவதற்காக குரூப்-1 தேர்வுக்கான அறிவிப்பு கடந்த ஜூன் 23-ம் தேதி வெளியிடப்பட்டது. இதற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு ஜூன் 30-ல் தொடங்கி நடந்து வருகிறது. விண்ணப்பிக்க கடைசி நாள் ஜூலை 29 ஆகும். முதல்நிலைத் தேர்வு செப்.6-ம் தேதி காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், தேர்வு தேதி மாற்றப்பட்டுள்ளது.

இத்தேர்வு செப்.27-க்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதாக டிஎன்பிஎஸ்சி செயலர் பனோத் ம்ருகேந்தர் லால் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



ஆடி மாதமும் அம்மன் திருவருளும் - 2

கதிராமங்கலம் வனதுர்க்கை அம்மன்

கும்பகோணத்தை அடுத்த திருவிடைமருதூர் அருகே உள்ள கதிராமங்கலத்தில் உள்ளது வனதுர்க்கை அம்மன் கோயில். தமிழக அளவில் வனதுர்க்கையம்மன் மூலவராக அருள்பாலிப்பது இங்கு மட்டுமே. சிறப்பு பெற்ற இந்த வனதுர்க்கை அம்மன், நவதுர்க்கை அம்மன் கோயில்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. சிவன், பிரம்மா, விஷ்ணு மற்றும் தேவர்களுக்கு தொடர்ந்து எல்லையில்லா துன்பங்களை தந்த அசுரர்களை அழிக்கவும், இடைவிடாது பூஜித்த மும்மூர்த்திகளின் துன்பங்களை போக்கவும், ஆதிபராசக்தி இளம்பெண்ணாகத் தோன்றி துர்க்கையின் அம்சத்தைப் பெற்று அசுரர்களை அழித்தார். அவரே இங்கு வனதுர்க்கையாக காட்சியளிக்கிறார். இந்த அம்மன் தினந்தோறும் இரவில் காசிக்குச் சென்று வருவதாகவும், இதேபோல் அகஸ்தியரும், மார்க்கண்டேயரும் இங்கு வந்து அம்மனை தரிசிப்பதாகவும் கூறப்படுகிறது. பிற கோயில்களில் உள்ள துர்க்கை அம்மன் வடக்கு நோக்கி, சிம்மம் அல்லது மகிஷா வாகனத்தில் அருள்பாலிப்பதுண்டு. ஆனால் இங்கே வனதுர்க்கை கிழக்கு நோக்கி பத்ம பீடத்தில் காட்சியளிக்கிறார். மேலும், அம்மன் தன் வலது கையை சாய்த்து அபயஹஸ்தம், வரதம் என இரு முத்திரைகளைக் காட்டி அருள்பாலிப்பது வேறு எந்தக் கோயில்களிலும் இல்லாத தனிச்சிறப்பாகும். நாள்தோறும் ராகு காலத்தில் இங்குள்ள அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறுகிறது. தங்களது குலதெய்வம் தெரியாத பக்தர்கள், இந்த அம்மனை குலதெய்வமாக நினைத்து வழிபட்டுச் செல்கின்றனர். குடும்ப விருத்திக்காக சந்தன அபிஷேகம், எதிரிகளின் தொந்தரவு நீங்க குங்கும காப்பு, செவ்வரளி அர்ச்சனை செய்தும் அம்மனை வழிபட்டு வருகின்றனர். திருமணத் தடைகள் மற்றும் கடன்கள் நீங்கவும், குடும்பப் பிரச்சினைகள் தீரவும், காரிய சித்தியடையவும் இந்த வனதுர்க்கை அம்மனை பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in